மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் ஏரியில் எந்த அளவுக்கு வசதிகள் இருக்கின்றன என்பது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**—*ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. உரிமைப் பிரச்சினை

முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கை

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் பற்றிய Point of Privilege. நேற்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவங்கள் குறித்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, இட்டுக்கட்டிய, வடிகட்டிய ஒரு கற்பனைக் கதையைச் சொல்லி அது எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிதாக வந்திருக்கிறது. சபாநாயகர் அவர்களே ஒருதலைபட்சமாக நடந்துகொண்டதாகவும், மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தாக்கப்படவே இல்லை, அதற்கும் தாமரைக்கனிக்கும் சம்பந்தமே இல்லை என்றும், பின்னாலே வந்த எம்.எல்.ஏ-க்கள் குதித்து, அவர் மேலே ஏறி, அவரே விழுந்து அதன் காரணமாக அடிபட்டார் என்றும் தெரிவித்துள்ளார். நல்ல வேளையாக பக்கத்தில் உள்ள அமைச்சர்கள் குத்தியதால் காயம் வந்தது என்று சொல்லாமல் பெருந்தன்மையாக எம்.எல்.ஏ.-க்கள் வந்து அவர் மேல் ஏறியதாலே, அவர் விழுந்து காயம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையை நீங்கள் பார்த்தால் இது Privilege-ஆக எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்பது தெரியும். சட்டமன்றத்திலே இருக்கிறபோது எல்லா உறுப்பினர்களும் பார்த்தார்கள்; பத்திரிகையாளர்கள் பார்த்தார்கள்; அரசு அதிகாரிகள் பார்த்தார்கள்; பார்வையாளர்கள், மேல் மாடத்திலிருந்து பார்த்தார்கள். இப்படி எல்லோர் கண் முன்பும் நடந்த ஒரு சம்பவத்தை, எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லி, அடிக்கவில்லை என்று சொல்லி, அதுபோல் அவர் அடிபட்டதையும்

1999 மார்ச் 23] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மறைத்து, அதற்கும் தாமரைக்கனிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லி, உங்களையும் அவமானப்படுத்தி, ஏதோ முன்னால் இருக்கிற அமைச்சர்கள், துரைமுருகன் அவர்கள், பொன்முடி அவர்கள் எல்லாம் கழுத்தைப் பிடித்து நெரித்தார்கள், தாமரைக்கனியின் கழுத்தைப் பிடித்து துரைமுருகன் நெரித்தார் என்று சொல்லி, இப்படியெல்லாம் முற்றிலும், எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல், தொடர்பும் இல்லாமல், முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது என்பார்கள்—அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுவார்கள், இலைச் சோற்றில் மறைப்பது என்பார், இது அதில்கூட வராது—கைச் சோற்றில் மறைப்பது போன்று ஓர் அப்பட்டமான பொய்யை, உண்மைக்குப் புறம்பான, மாறான தகவலை வெளியே கொடுத்திருக்கிறார். இது இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவத்தை அப்படியே மாற்றி, திரித்து, ஒரு கற்பனையை மக்களிடத்திலே, நம்புகின்ற வரையில் நம்பட்டும் என்று—கோயபல்ஸ் தத்துவம் என்று சொல்லுவார்கள், அதுபோல ஒரு பொய்யைச் சொன்னால், யாராவது 10 பேர் சந்தேகப்பட்டால், சந்தேகப்படுகின்ற வரையில் லாபம் என்பது 'கோயபல்ஸ்' தத்துவம் என்பார்கள். அதுமாதிரி இன்றைய நவீன கோயபல்ஸ்—ஆக இதுபோன்ற ஒரு கற்பனைச் செய்தியை முன்னாள் முதலமைச்சர் இன்றைக்கு வெளியே அறிக்கை மூலமாக வெளியிட்டிருக்கிறார். இது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும்; சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அவமதிப்பதாகும். ஒருதலைபட்சமாக செயல்பட்டிருக்கிறீர்கள் என்று சொல்லி, உங்களையும் விமர்சித்திருக்கிறார். இதை நீங்கள் Privilege Committee-க்கு அனுப்பி அவரிடமிருந்து விளக்கம் கேட்க வேண்டும். மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும் நேற்று பார்த்ததைச் சொல்ல வேண்டும். ஏனென்றால் பத்திரிகைகளில் வரும்போது இந்தச் சம்பவங்கள் திரித்து வருகின்றன. ஒரு நிகழ்ச்சி நடந்த பிறகு, அதற்கு வேறு அர்த்தம் சொல்லுவது என்பது, இந்த அம்மையாருக்கு வழக்கமாகிவிட்டது.

நேற்றே நான் பேசுகின்றபோது சொன்னேன்; இது இப்படித்தான் நடக்கும் என்று. அந்த அம்மா என்ன செய்வார்கள் என்று சொன்னேன், கொஞ்ச நாள் கூட இருந்ததால் எனக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாதிரி ஒரு கதை வரப்போகிறது, ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, இதுமாதிரி அடிபட்டார்கள், உட்காயம் வந்திருக்கிறது என்று சொல்லி, ஒரு கதையை set-up செய்து சாயங்காலம் ஓர் அறிக்கை வரும் என்று சொன்னேன். அதேமாதிரி ஓர் அறிக்கை வந்திருக்கிறது. மருத்துவமனைக்கு 5 மணி நேரம் கழித்துச்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 23

சென்றிருக்கிறார்கள். தாமரைக்கனிக்கு காயம் இருக்குமேயானால் இங்கே இருந்து சென்ற உடனே ஆஸ்பத்திரியில் சேர்ந்திருக்கலாம். Private ஆஸ்பத்திரியிலோ அல்லது Government ஆஸ்பத்திரியிலோ சேர்த்திருக்கலாம். எங்கே சேர்த்திருக்கிறார்கள் என்றால் Poes Garden-இல் சேர்த்திருக்கிறார்கள். சேர்த்து 5 மணி நேரம் இருந்து, 6 மணிக்கு Police எல்லாம் அங்கே நின்று பிடிக்கப் போனதற்குப் பின்னால்; ஒருவேளை அங்கேயிருந்து கைப்பற்றிவிட்டால், அவர்களைக் கைது செய்தால், மறைத்து வைத்த குற்றம் தன்மேல் வந்துவிடும் என்று பயந்தாரோ என்னவோ தெரியவில்லை; அதற்குப் பிறகு Ambulance-ஐ அப்போலோவிலேயிருந்து வரச்சொல்லி, Ambulance-லே ஏற்றி, ஆறு மணிக்கு மேலே கொண்டுபோய்—இங்கே 12 1/2 மணிக்கு நிகழ்ச்சி நடந்தது. ஆறு மணிக்கு மேலே கொண்டுபோய் — உயிருக்கு ஆபத்து என்று கொண்டுபோய், கட்டுப்போட்டு, அதுவும் தலையிலே கட்டுப்போட்டு, அவர்களை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, பிரித்துப் பார்த்தால், ஒன்றும் இல்லை என்று அவர்கள் கட்டையெல்லாம் பிரித்துவிட்டு. உட்கார்ந்திருக்கிறார்கள். இப்படி ஒரு பெரிய நாடகமே நிகழ்ந்திருக்கிறது. மக்கள் மத்தியில் சந்தேகம் வர வேண்டுமென்று, உள்நோக்கத்தோடு செல்வி ஜெயலலிதா செய்திருக்கிறார் எனவே, எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் இங்கே இருக்கிறார்கள். நேற்று என்ன நடந்தது என்பதை இரண்டிரண்டு வரியிலே அவர்கள் சொல்ல வேண்டும். இந்தமாதிரி நடந்ததா, இல்லையா என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். அது நாட்டு மக்களுக்கு விளக்கம் தருகின்ற விதத்திலே அமையும் என்ற காரணத்தினாலே, அந்த வாய்ப்பையும் தந்து, மேலும் இந்தப் பொய் அறிக்கையை, இந்த முரண்பாடான அறிக்கையை, உண்மைக்குப் புறம்பான அறிக்கையை உரிமைக் குழுவிற்கு நீங்கள் அனுப்ப வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

3. தன்னிலை விளக்கம்

பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து தாமரைக்கனியின் குற்றச்சாட்டுக்களை மறுத்து பொதுப் பணித் துறை அமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு சொன்னதைப்போல,